**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 297 of 2022**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : பாலசுப்பிரமணி** | **Father/Husband's Name : ராமலிங்கம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 16.06.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி பாளையத்தில் குடியிருந்து டீ கடையில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 17.06.2022ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எனது மகன் மனோஜ் குமார் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனமான Duo வாகனத்தில் பாளையத்தில் இருந்து பழனி ஆண்டவர் கல்லூரிக்கு வந்தபோது பழனி பேருந்து நிலையம் அருகே உள்ள சரவண பவன் ஓட்டலுக்கு அருகே சூர்யா பேக்கரிக்கு எதிரில் விபத்து ஏற்பட்டது. பழனி மலைக்கோவிலில் இருந்து வந்த மகேந்திரா வாகனம் வேகமாக வந்து மோதியதில் எனது மகனுக்கு தலை, கை, கால், காது ஆகிய இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது பழனி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். விபத்து ஏற்பட்ட பிறகு தகவலின்பேரில் பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து எனது மகனை பார்த்துவிட்டு அன்றே பழனி நகர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். மகேந்திரா வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் பழனியில் எவ்வளவு நாட்களாக குடியிருந்து வருகிறேன் என்றால்

40 வருடங்கள். இறந்துபோன எனது மகன் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்தார் என்றாலும் எனது மனைவி போட்டோ கடையில் வேலை செய்கிறார் என்றாலும் சரிதான். இறந்துபோன எனது மகன் என்ன படிப்பு படித்தார் என்றால் பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் Fashion Designing படித்தார். பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி மதியம் 1.30 மணிக்கு வகுப்பு ஆரம்பிக்கும் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. சம்பவயிடத்தில் இருந்த நபர்கள் சொன்னதன் அடிப்படையில் தான் நான் புகார் சொன்னேன் என்றால் சரிதான். எனது மகன் வாகனத்தின் மீது மோதியதாக சொல்லும் வாகனத்தின் ஓட்டுநரை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை தற்போது தான் நீதிமன்றத்தில் முதன்முறையாக பார்க்கிறேன் என்றால் சரியல்ல. கையெழுத்து செய்ததாக சொல்லும் ஆவணத்தில் உள்ள முழுமையான விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விபட்டதன் அடிப்படையில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.16 17:27:00 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 297 of 2022**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : மகேஷ்குமார்** | **Father/Husband's Name : பாலசுப்பிரமணி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 16.06.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பழனி பாளையத்தில் குடியிருந்து டீ கடையில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் விபத்தில் இறந்துபோன மனோஜ்குமார் எனது உடன் பிறந்த தம்பி. அ.சா.1 பாலசுப்பிரமணி எனது அப்பா. கடந்த 17.06.2022ம் தேதி மதியம் சுமார் 1 – 1.30 மணியளவில் எனது தம்பி மனோஜ்குமார் பழனியாண்டவர் கல்லூரியில் இருந்து அவரது இருசக்கர வாகனமான Duo வாகனத்தில் பழனி பேருந்து நிலையத்தில் இருந்து திருஆவினன்குடி நோக்கி சென்று கொண்டிருந்தபோது சரவணபவன் அருகே எதிரே வந்த மகேந்திரா நான்கு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு எனது குடும்பத்தாருக்கு கிடைத்த தகவலின்பேரில் நானும், எனது குடும்பத்தாரும் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு தலை, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. மேல் சிகிச்சைக்காக மருத்துவர் பரிந்துரையின்பேரில் மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விபட்டதன் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரிதான். சம்பவம் பற்றி கேள்விபட்டவுடன் பழனி அரசு மருத்துவமனையில் சென்று எனது தம்பி மனோஜ் குமாரை பார்த்தேன் என்றால் இல்லை, வீடு அருகில் இருப்பதால் சம்பவயிடத்தில்**

வந்து பார்த்தேன். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு சென்று தான் எனது தம்பியை பார்த்தேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.16 17:27:07 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.